செய்தி வெளியீடு எண். 49 நாள்: 24.01.2018

**மக்கள் தொடர்பு திட்டத்தில் 210 பயனாளிகளுக்கு ரூ.16 இலட்சத்தி 75 ஆயிரத்து 690 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் ஆகியோர் வழங்கினார்கள்**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், அரசூர் ஊராட்சியில் மக்கள் தொடர்பு திட்டத்தில் 210 பயனாளிகளுக்கு ரூ.16 இலட்சத்தி 75 ஆயிரத்து 690 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் ஆகியோர் இன்று (24.01.2018) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில், அரசே பொதுமக்களை தேடிச் சென்று, கோரிக்கை மனுக்களை பெற்று உரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. மக்களின் குறைகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசே மக்களை தேடி அவர்களது கிராம ஊராட்சியில் மனுக்களை பெற்று தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. பொதுமக்கள் அரசு நலத்திட்டங்கள் பற்றி தெரிந்துகொள்ள சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, சமூக நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் திட்ட விளக்கவுரை மூலம் தெரிந்துகொண்டு பயன்பெற வேண்டும்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு மாநிலத்தில் மட்டும் பொதுமக்களின் சுகாதாரத்தில் அதிக அக்கறைக்கொண்டு செயல்படும் அரசாக உள்ளது. வரும் மார்ச் மாதத்திற்குள் தமிழகத்தை திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநிலமாக அறிவிக்கப்படவுள்ளது. பிப்ரவரி மாதத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தை திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக அறிவிக்கப்படவுள்து. அதன்படி அரசூர் ஊராட்சியில் மொத்தம் உள்ள 656 வீடுகளில் 115 வீடுகளில் தனிநபர் கழிவறைகள் அமைக்கப்படவில்லை. மிக விரைவில் அனைத்து வீடுகளிலும் தனிநபர் இல்லக் கழிவறைகள் அமைக்கப்படும்.

வரும் பிப்ரவரி 24-ம் தேதியிலிருந்து வேலைகளுககு செல்லும் மற்றும் சுய தொழில் புரியும் மகளிர்களுக்கு 50 சதவிகிதம் அல்லது ரூ. 25 ஆயிரம் மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். 18 முதல் 40 வயது வரை, 8-ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, வாகனம் ஓட்டத் தெரிந்த உழைக்கும் மகளிர்களுக்கு இத்திட்டத்தில் பயன்பெறலாம். விண்ணப்பித்தவர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் 1,746 ஸ்கூட்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து பொன்னேரி வட்டத்தில் வருவாய்த்துறை மூலமாக மனுக்கள் பெறப்பட்டு அதில் தகுதிவாய்ந்த மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகிறது. இன்று சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 45 பயனாளிகளுக்கு முதியோர், விதவை ஓய்வூதியம் மற்றும் இதர ஆணைகளையும், 18 நபர்களுக்கு ரூ. 4 இலட்சத்தி 51 ஆயிரத்து 900-ம் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களையும், 10 நபர்களுக்கு புதிய ஸ்மார்ட் கார்டுகளையும், பல்வேறு சாலை விபத்துகளில் உயிர் இழந்தவர்களின் 10 குடும்பத்தினருக்கு ரூ. 9 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான உதவித்தொகையும், மாண்புமிகு முதலமைச்சர் உழவர்

பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகை 6 நபர்களுக்கு ரூ. 50 ஆயிரத்திற்கான நிதி உதவியும், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை 10 நபர்களுக்கு ரூ. 2 இலட்சத்தி 12 ஆயிரத்து 500 மதிப்பிலான நிதியுதவியும், பழங்குடியினர் இனச்சான்று மற்றும் இதர சான்றுகள் 106 நபர்களுக்கும், வேளாண்மைதுறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.11,290 மதிப்பிலான விசைத்தெளிப்பான், நெல் வகைகள் மற்றும் எம்.என் மிக்ஷர் ஆகியவை மானிய விலையிலும் ஆக மொத்தம் 210 பயனாளிகளுக்கு ரூ.16,75,690 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்". இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து 100-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, அதற்கு உரிய தீர்வுகளை விரைந்து வழங்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு. பி.வி.தயாளன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பத் திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் திரு.வே.முத்துசாமி, பொன்னேரி வட்டாட்சியர் திருமதி.ஜே.சுமதி மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**